வகுப்பு : ஆறு

ஜனவரி மாதப் பாடப்பகுதி (இயல் - 7)

செய்யுள் : பராபரக்கண்ணி

: திருக்குறள்

உரைநடை : நிலம் பொது (செயல்பாடாகக் கொடுக்கப் - படுள்ளது)

துணைப்பாடம் : பாதம்

இலக்கணம் : நால்வகைச் சொற்கள்

இயல் - 8 :

செய்யுள்-1 (திறனறிநல்) - ஆசிய ஜோதி

செய்யுள் - 2 . இளைய தோழனுக்கு (வாய்மொழி மட்டும்)

# இயல் - 7

## செய்யுள்

## பராபரக் கண்ணி

I குறுவினா:-

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?

விடை: அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?

விடை: அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக தன்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

## திருக்குறள்

I வினா-விடை:

1. அறிவின் பயன் யாது?

விடை: பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதாவிட்டால் நாம் பெற்றுள்ள அறிவால் எந்தப் பயனும் இல்லை

2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?

விடை: தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். அதுவே அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது.

3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

விடை: இல்லாதவர்களுக்குத் தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும்.

Scanned with OKEN Scanner

# துணைப்பாடம்

## பாதம்

I வினா - விடை:

1. மாரி என்பவர் யார்?

மாரி என்பவர் காலணி தைக்கும் ஒரு தொழிலாளி ஆவார்.

2. மாரியின் வறுமைநிலை குறித்து எழுதுக.

மழை இடைவிடாது பெய்ததால் எவரும் காலணி தைக்க வரவில்லை. மாரிக்கு பசியும் மிகுந்தது. டீ குடிக்கக் கூட கையில் பணம் இல்லை. இதுவே மாரியின் வறுமை நிலை ஆகும்.

3. சிறுமி கொண்டு வந்த காலணியின் நிறம் என்ன?

சிறுமி கொண்டு வந்த காலணியின் நிறம் இளம் சிவப்பு.

4. சிறுமியின் காலணியின் மகத்துவம் யாது?

சிறுமியின் காலணியை காலில் அணிந்தால், மேகத் துணுக்குகள் காலடியில் பரவுவது போலவும், பனியின் மிருது படர்வது போலவும் இருந்ததே. சிறுமியின் காலணியின் மகத்துவம் ஆகும்.

5. மாரியின் வாழ்வு நிலை எவ்வாறு உயர்ந்தது?

காலணியை அணிந்துப் பார்த்தவர்கள் அதன் மகத்துவத்தை உணர்ந்து தானாகவே பணம் கொடுத்தார்கள். அப்பணத்தில் இரண்டு பசுக்களை வாங்கினார். வீடு கட்டினார். இவ்வாறு மாரியின் வாழ்வு நிலை உயர்ந்து கொண்டே போனது.

6. பாதம் என்ற இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்ட கருத்து யாது?

'பாதம்' என்ற இக்கதையின் மூலம் நாங்கள் அறிந்து கொண்ட கருத்து 'நம்மையிலும் நேர்மை, செய் நன்றி மறவாமை, மனசாட்சியின்படி வாழ்தல் ஆகும்.

# இலக்கணம்

## நால்வகைச் சொற்கள்

I நிரப்புக:

1. சில எழுத்துகள் தனித்து நின்று ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து வந்து பொருள் தருவது சொல் எனப்படும்.

2. இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும்

3. ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

4. வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள்.

5. செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

6. பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும்.

7. இடைச்சொல் தனித்து இயங்காது.

8. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்.

Scanned with OKEN Scanner

## II உதாரணம் தருக:

1. பெயர்ச்சொல் - பள்ளி, காலை
2. வினைச்சொல் - எழுது, விளையாடு
3. இடைச்சொல் - மற்றொருவர்.
4. உரிச்சொல் - சாலச்சிறந்தது,

## III கூறியவாறு செய்க:

1. கண்ணன் படித்தான் - (பெயர்ச்சொல்லை எழுதுக)

விடை: கண்ணன்.

2. கமலா பாடினாள். (வினைச்சொல்லை எழுதுக)

விடை: பாடினாள்

3. நகரம் (உரிச்சொல்லாக மாற்றுக)

விடை: மாநகரம்.

4. தந்தை தாய் (இடைச்சொல்லை சேர்த்து எழுதுக)

விடை: தந்தையும், தாயும்

## IV இலக்கணக் குறிப்பு:

1. பாரதி - பெயர்ச்சொல்
2. படித்தான் - வினைச்சொல்
3. கண்ணனும் வளவனும் - இடைச்சொல்
4. மாமரம் - உரிச்சொல்

Scanned with OKEN Scanner

இயல் - 8

## செய்யுள் - [ஆசிய ஜோதி]

### செய்யுள் திறனறிதல்:

I நிரப்புக:

1. இப்பாடலின் ஆசிரியர் கவிமணி தேசிகவிநாயகனார்
2. இப்பாடலின் தலைப்பு ஆசிய ஜோதி
3. 'பார்' என்பதன் பொருள் உலகம்.
4. 'கவிமணி' என்னும் பட்டம் பெற்றவர் தேசிகவிநாயகனார்
5. 'வேந்தன்' என்பதன் பொருள் அரசன்.
6. காடு, மலை எல்லாம் மேய்ந்து வருகிறது ஆடு.
7. யாகசாலையில் நின்றவர்கள் புத்தரைக் கண்டு நடுங்கினார்கள்.
8. இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.
9. ஒருவர் செய்த நன்மையும், தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.
10. எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர்.

Scanned with OKEN Scanner